முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 யூலை

## (103) பொருளியல்

(Economics)

2024-08-17
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைபுத்தாள் வழங்கப்படும்.*
  - (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் மூலதனத்திற்கான வெகுமதியாக (reward) அமைவது எது?

(1) இலாபம். (2) கூலிகள். (3) வாடகை. (4) வட்டி.

**1.2** பொருள்கள் **X** மற்றும் **Y** இற்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியின் குணகம் எதிர்க் கணியமாக இருப்பின், அப்பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) பொதுப் பொருள்கள். (2) நிரப்புப் பொருள்கள்.

(3) சாதாரண பொருள்கள். (4) பிரதியீட்டுப் பொருள்கள்.

**1.3** ஒரு குறித்த முடிவைத் தெரிவுசெய்யும்போது அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

(1) சந்தர்ப்பச் செலவு. (2) அரிதானதன்மை.

(3) சராசரிக் கிரயம். (4) தெரிவு.

**1.4** நீண்ட கால உற்பத்திச் செயன்முறை தொடர்பில் கீழ்வருவனவற்றுள் சரியான கூற்றாக **அமையாதது** எது?


(1) நிறுவனம், உற்பத்தியின் அனைத்துக் காரணிகளையும் மாற்ற முடியும்.

(2) உற்பத்தியின் நிலையான காரணிகள் எதுவுமில்லை.

(3) உற்பத்திக் காரணிகளை மாறும் காரணிகள் எனவும் நிலையான காரணிகள் எனவும் பிரிக்கலாம்.

(4) நிறுவனம் அதன் உற்பத்திக் கொள்ளளவை விரிவுபடுத்த அதிக நெகிழ்ச்சித்தன்மையைக் கொண்டுள்ளது.

**1.5** பண்டமொன்றிற்கான கீழ்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:




உற்பத்தியாளர் மிகை :

(1) ரூபா 25,000/-. (2) ரூபா 40,000/-. (3) ரூபா 50,000/-. (4) ரூபா 80,000/-.

**1.6** 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) $-2.3$ %. (2) $-8.7$ %. (3) 1.4 %. (4) $-4.8$ %.

**1.7** பொருள் **A** இன் விலை ரூபா 40/- இலிருந்து ரூபா 20/- இற்குக் குறைவடையும்போது, பொருளின் கேள்விக் கணியமானது 800 அலகுகளிலிருந்து 1,200 அலகுகளாக அதிகரிக்கிறது. இந்தப் பொருளின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியானது :

(1) நெகிழ்ச்சியற்றது. (2) நெகிழ்ச்சியானது. (3) அலகு நெகிழ்ச்சி. (4) பூரண நெகிழ்ச்சி.

**1.8** கீழ்வருவனவற்றுள் கேள்வி வளையியை இடப்பக்கமாக நகர்த்தும் காரணி எது?

(1) பிரதியீட்டுப் பொருள்களின் விலை குறைவடைதல்.

(2) நிரப்புப் பொருள்களின் விலை குறைவடைதல்.

(3) நுகர்வோரின் வருமானம் அதிகரித்தல்.

(4) நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்தல்.

**1.9** தனியுரிமைச் சந்தை தொடர்பில், பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றாக **அமையாதது** எது?

(1) கேள்வி வளையி என்பது இடமிருந்து வலமாகச் செல்லும் கீழ்நோக்கிய சாய்வு ஆகும்.

(2) இது விலையைத் தீர்மானிப்பதற்கான வலுவைக் (power) கொண்டுள்ளது.

(3) இது குறுங்கால ஓட்டத்தில் சாதாரண இலாபத்தை மாத்திரம் உருவாக்குகிறது.

(4) சந்தையில் ஒலேயொரு நிறுவனம் மட்டும் இயங்குகிறது.

**1.10** கட்டற்ற சந்தையில் (free market) கீழ்வருவனவற்றில் யாரைப் பாதுகாக்க அரசாங்கத்தால் ஆகக்குறைந்த விலை விதிக்கப்படுகிறது?

(1) போட்டியாளர்களை. (2) ஏற்றுமதியாளர்களை.

(3) நுகர்வோரை (4) உற்பத்தியாளர்களை.

*இல.* **1.11** *மற்றும்* **1.12** *ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** பணவீக்கமும் விலை மட்டமும் ......... (*நுண்பாகப் / பேரினப்*) பொருளியலில் உள்ளடக்கப்படுகின்றன.

**1.12** மொத்தப் பயன் உச்சமாகும்போது, எல்லைப் பயன் .............. (*மறைப் பெறுமானமாக / பூச்சியமாக*) இருக்கும்.

*கீழே* **1.13** *மற்றும்* **1.14** *இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.13** வெளியீடு மேலும் ஒரு அலகினால் அதிகரிக்கும்போது, மொத்த வருமானத்திற்கான சேர்ப்பனவானது எல்லை வருமானம் எனக் கூறப்படுகிறது.

**1.14** மாறும் காரணி உள்ளீடுகள் ஒரே மாதிரியானவை அல்ல என்பது குறைந்துசெல்லும் எல்லை வருமான விதியின் ஒரு அனுமானமாகும்.

**1.15** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** சந்தையில் அரசாங்கம் தலையிடுகின்ற இரண்டு (02) வழிகளைக் குறிப்பிடுக.

**1.16** "தேவைகள் (needs)" மற்றும் "விருப்பங்கள் (wants)" ஆகியவற்றிற்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.17** "கடன் மதிப்பீடு (Credit Rating)" என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** சிலருரிமைச் (oligopoly) சந்தையொன்றின் இரண்டு (02) பண்புகளைப் பட்டியலிடுக.

**1.19** இலங்கையிலுள்ள நிதி இடையீட்டாளர்களுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** "நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி" இன் இரண்டு (02) சமூகத் தோற்ற வடிவங்களைக் (social profiles) குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பொருளாதாரப் பண்டங்களின் மூன்று (03) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கலப்புப் பொருளாதார முறைமையால் எவ்வாறு பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) விலைக்கும் கேள்விக் கணியத்திற்குமிடையே எதிர்மறையான (negative) தொடர்பு இருப்பதற்கான ஒரு காரணத்தை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) பண்டமொன்று தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கேள்விச் (Qd) சார்பு மற்றும் நிரம்பல் (Qs) சார்பு ஆகியவற்றைக் கவனத்திற் கொள்க :

$$Qd = 1,200 - 20p$$

$$Qs = -200 + 20p$$

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பண்டத்தின் சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற மூன்று (03) காரணிகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) குறுங்கால ஓட்டத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்று அதன் இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்துகிறது என்பதை வரைபொன்றைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) பணத்திற்கான கேள்விக்கான இரண்டு (02) நோக்கங்களைக் (motives) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வர்த்தக வங்கிகள் தொடர்பில் இலாபத்தன்மை (profitability) மற்றும் திரவத்தன்மை (liquidity) ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இலங்கை மத்திய வங்கி பயன்படுத்தும் இண்டு (02) தரம்சார் பணக் கொள்கைச் சாதனங்களை (monetary policy instruments) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 05

(a) ஒப்பீட்டு நயக் கோட்பாட்டில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) எடுகோள்களைக் (assumptions) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **நாடு A** மற்றும் **நாடு B** ஆகியன **P, Q** என்னும் இரு பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. இரண்டு நாடுகளினதும் ஒரு கூலி அலகினால் உற்பத்தி செய்யக்கூடிய **P, Q** ஆகியவற்றின் அலகுகளின் எண்ணிக்கையைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது :

| பொருள் / நாடு | P (அலகுகளில்) | Q (அலகுகளில்) |
|---|---|---|
| **A** | 4 | 12 |
| **B** | 21 | 7 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் எந்த நாடு முழு நயத்தைக் கொண்டுள்ளது என்பதை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(ii) ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது என்பதை **அடையாளங் காண்க.** *(உமது விடைக்கு ஆதரவாகக் கணிப்பீடுகளைக் காட்டுக).* (04 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் தேய்வு மீதான பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) வர்த்தகச் (வியாபாரச்) சுழற்சியின் இரண்டு (02) கட்டங்களை (phases) **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(B) பொருளாதாரமொன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய ஓர் ஆண்டிற்கான கீழ்வரும் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 1,600 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 2,500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 4,500 |
| இருப்பிலுள்ள மாற்றங்கள் | 2,500 |
| பெறுமதிகளிலுள்ள மாற்றங்கள் | 2,550 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் | 4,800 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | 2,750 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 1,004 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில். (06 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (03 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(C) மொத்த உள்நாட்டு வருமானத்திற்கும் (GDI) மொத்தத் தேசிய வருமானத்திற்கும் (GNI) இடையேயான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(D) நாட்டின் நிதிக் கொள்கையால் (fiscal policy) வணிகங்கள் மீது ஏற்படும் இரண்டு (02) தாக்கங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |